1970 நவம்பர் 28]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: சமூக நலத் துறை வாரியம் மூலமாகவும் நமது மாநில அரசாங்கத்தின் மகளிர் அமைப்புகள் மூலமாகவும் துப்புரவுப் பணி இதிலே விருப்பம் உள்ள மக்களை வைத்து செய்யப்பட்டு வருகிறது. இன்னும் கல்லூரி மாணவர்களை வைத்து துப்புரவு எப்படிச் செய்ய வேண்டுமென்று, சில பகுதிகளுக்குச் சென்று பயிற்சி அளிக்கப் பட்டு வருகிறது. கல்லூரி மாணவிகளை வைத்தும் இது செய்யப்படுகிறது.

Tamil Nadu Development Supplement

*21 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any Tamil Nadu Development Supplement was released in the press about 30th June 1969;

(b) the details thereof; and

(c) the cost of the publication?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

சோழவந்தானில் உள்ள மனமகிழ் மன்றங்கள்.

* 22 வினா.—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்திலுள்ள சோழவந்தானில் Recreation Club -கள் எத்தனை உள்ளன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மனமகிழ் மன்றங்கள் மூன்று உள்ளன.

திரு. பி. எஸ். மணியன்: சோழவந்தானில் மாத்திரம் அல்ல. தமிழ் நாட்டில் இருக்கிற ரெக்ரியேஷன் கிளப்புகள் என்கிற பெயரால் நடத்தப்படுகிற இடங்களில் எல்லாம் சூதாட்டமும் சட்டத்திற்குப்புறம்பான செயல்களும் அதிகமாக நடைபெறுகிற காரணத்தால் அவைகளுக்குக் கொடுக்கப்படுகின்ற அனுமதியை ரத்து செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இவற்றிற்குக் கொடுத்திருக்கிற அனுமதி மத்திய அரசாங்க 1860 சங்கங்கள் பொதுச் சட்டத்தின் கீழ் 20-வது பிரிவின் கீழ் இவைகள் நிபந்தனை இல்லாமல் பதிவு செய்யப்படுகின்றன. சூதாட்ட இடங்களாக இருப்பதைப் போலீசார் கண்காணித்து நடவடிக்கை எடுக்கிறார்கள். லைசென்சை ரத்து செய்ய முடியாத நிலையிலே அதற்கு மத்திய அரசை வற்புறுத்தி இதை ஒழுங்குபடுத்தும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளது.

திரு. கே. விநாயகம்: இந்த ரிக்ரியேஷன் கிளப்புகள் என்று சொல்லப்படுகிற அடிப்படையிலே, சென்னையிலே கட்சிக்காரர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அதிகமான அளவு லைசென்ஸ் கொடுக்கப்பட்